# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை கிராமம், பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035.
(Pension Pay Office Back Side) (சைதாப்பேட்டை மெட்ரோ ரயில் நிலையம் அருகில்), தொலைபேசி:044-2951 5590

**<u>ஆணை நாள் – 09.04.2025</u>**

**<u>முன்னிலை</u>**

**முனைவர் மா. செல்வராஜ், எம்.எஸ்.சி., பி.எச்.டி.,**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**<u>வழக்கு எண்.SA.13797/F/2024</u>**

திரு S. பாஸ்கர் -- மனுதாரர்

/எதிர்/

பொதுத்தகவல் அலுவலர் / கோட்டப்பொறியாளர்
கோட்டப்பொறியாளர் அலுவலகம்,
நெடுஞ்சாலை கட்டுமானம் (ம) பராமரிப்பு, -- பொது அதிகார அமைப்பு
குரங்குச்சாவடி, சேலம் மாவட்டம் - 636 004.

<u>பார்வை:</u>

| | |
|---|---|
| தகவல் பெறும் உரிமைச் சட்டம், பிரிவு 6(1)-ன்கீழ் மனுதாரர் மனு செய்த நாள் | 03.06.2024 |
| பொதுத் தகவல் அலுவலர் பதில் அளித்த நாள் | 20.06.2024 |
| பிரிவு 19(1)-ன் கீழான முதல் மேல்முறையீட்டு மனுவின் நாள் | 19.07.2024 |
| முதல் மேல்முறையீட்டு அலுவலர் பதில் அளித்த நாள் | 27.08.2024 |
| பிரிவு 19(3)-ன் கீழான இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் நாள் | 23.10.2024 |

*******

**<u>ஆணை</u>**

இவ்வழக்கு இன்று (09.04.2025) இவ்வாணையத்தில் காணொளி காட்சி வாயிலான விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இன்றைய காணொளி காட்சி வாயிலான விசாரணைக்கு மனுதாரர் திரு S. பாஸ்கர் என்பவர் ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பாக திரு மு. முத்துக்குமரன், கோட்டப்பொறியாளர், கோட்டப்பொறியாளர் அலுவலகம் (நெடுஞ்சாலை), கட்டுமானம் மற்றும் பராமரிப்பு, சேலம் மாவட்டம் என்பவர் ஆணையத்தில் நேரில் ஆஜரானார்.

2. மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, சட்டப்பிரிவு 6(1)-ன்கீழ், சேலம் மாவட்டம், கோட்டப்பொறியாளர் அலுவலகம்-I, [க(ம)ப] நெடுஞ்சாலை அலுவலக பொதுத் தகவல் அலுவலருக்கு அனுப்பியுள்ள மனுவில், தங்களது அலுவலக இருப்பு கோப்பில் பராமரிக்கப்படும் அரசாணை எண்.43, சுற்றுப்புறம் மற்றும் வனத்துறை (வனம் 4) நாள் 22.02.2003 என்ற ஆவணத்தின் நகல், சேலம் நெடுஞ்சாலை கட்டுமானம் மற்றும் பராமரிப்பு உட்கோட்டத்திற்குட்பட்ட சேலம் தெற்கு வட்டம், ஆட்டையாம்பட்டி கிராமம்,

ஆட்டையாம்பட்டியிலிருந்து சேலம் செல்லும் மெயின்ரோடு [SH 86A] (மின்சங்கு எதிரில்) இருந்த சுமார் 45 வயதுடைய 1305.2024 அன்று காற்றில் விழுந்த பலன்தரும் சீனியரேஜ் மதிப்பில் முதல் வகுப்பு வேப்பமரம் நெடுஞ்சாலைத் துறையினரால் அகற்றப்பட்டுள்ளது. மேற்படி அகற்றப்பட்ட வேப்ப மரத்துக்கு ஈடாக வைக்கப்பட்ட மரக்கன்றுகளின் எண்ணிக்கை பற்றிய விவரம், மேற்படி அகற்றப்பட்ட மர ஏல நடவடிக்கையில் தற்போதைய சந்தை மதிப்பினையும் அதை நிர்ணயம் செய்த அதிகாரியின் முழு விவரம், மேற்படி அகற்றப்பட்ட மரத்துக்கு ஈடாக வைக்கப்பட்ட மரக்கன்றுகள் எண்ணிக்கை பற்றிய விவரம், மேற்படி அகற்றப்பட்ட மர ஏலத்தில் கலந்துகொண்ட ஒவ்வொரு ஏலதாரர்களும் செலுத்திய முன்வைப்பு தொகை மற்றும் பிணைய வைப்பு தொகையின் விவரம்,மேற்படி மரத்தினை அகற்ற ஒப்பந்தம் பெற்ற ஒப்பந்ததாரரின் முழு விவரம் உள்ளிட்ட முழு விவரங்களை மொத்தம் 10 இனங்களில் தகவல்களாக வழங்கக் கோரியுள்ளார்.

3. மனுதாரர் மேற்குறிப்பிட்டவாறு தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 6(1)-ன்கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனுவிற்கு முழுமையான தகவல்கள் வழங்கப்படவில்லை எனபதால், தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 19(1)-ன்கீழ் முதல் மேல்முறையீட்டு மனுவினை தாக்கல் செய்துள்ளார். அம்மனுவிற்கும் முழுஜமயான தகவல்கள் வழங்கப்படவில்லை என்பதால், மனுதாரர், தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 19(3)-ன்கீழ் தனது இரண்டாவது மேல்முறையீட்டு மனுவினை இவ்வாணையத்தில் தாக்கல் செய்துள்ளார். அதனடிப்படையில், மனுதாரரின் இரண்டாவது மேல்முறையீட்டு மனு இன்று (09.04.2025) விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் ஆஜரான மனுதாரர், தனது மனுவில் கோரியுள்ள தகவல்கள் குறித்து நாளதுவரையில் தனக்கு முழுமையான தகவல்கள் வழங்கப்படவில்லை என்று தெரிவித்தார்.

5. இன்றைய விசாரணையில் ஆஜரான பொதுத் தகவல் அலுவலர், மனுதாரருக்கு தகவல்கள் வழங்கத் தயாராக இருப்பதாகத் தெரிவித்து, அதற்கான க.எண்.1082/2024/இவஅ1 நாள் 07.04.2025 தேதியிட்ட ஆவண நகல்களை இவ்வாணையத்தின் பார்வைக்கும் சமர்ப்பித்தார்.

6. இன்றைய விசாரணை மற்றும் ஆவணப் பரிசீலனையின் முடிவில், பொதுத் தகவல் அலுவலரால் மனுதாரருக்கு வழங்கப்படும் தகவல்களை இவ்வாணையம் கவனமுடன் பரிசீலனை செய்கையில், மனுதாரருக்கு அத்தகவல்கள் போதுமானது எனக்கருதுகிறது. மேலும், மனுதாரருக்கு வழங்கப்படும் தகவல்களில் ***'தகவல் பெறும் உரிமைச் சட்டப்படி தகவல்கள் வழங்கப்படுகிறது' என்ற முத்திரையுடன் ஒவ்வொரு பக்கத்திலும் சான்றொப்பமிட்டு*** இவ்வாணை கிடைக்கப்பெற்ற ஏழு நாட்களுக்குள் மனுதாரருக்கு தகவல்களை அனுப்பிவைத்து, மனுதாரர் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை அட்டையின் நகலினை இவ்வாணையத்திற்கு பதிவுத் தபாலில் அனுப்பிவைக்குமாறு பொதுத் தகவல் அலுவலருக்கு உத்தரவிடப்பட்டு, மனுதாரரின் இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் மீதான விசாரணையை இவ்வாணையம் இத்துடன் முற்றாக்கம் செய்து உத்தரவிடப்படுகிறது.

**ஒம்/- (மா. செல்வராஜ்)**
**மாநில தகவல் ஆணையர்**

(ஆணையத்தின் ஆணைப்படி)

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண்.SA.13797/F/2024</u>**
**பெறுநர்**
**<u>பொது அதிகார அமைப்பு:-</u>**
பொதுத்தகவல் அலுவலர் / கோட்டப்பொறியாளர்
கோட்டப்பொறியாளர் அலுவலகம்,
நெடுஞ்சாலை கட்டுமானம் (ம) பராமரிப்பு,
குரங்குச்சாவடி, சேலம் மாவட்டம் - 636 004.

**<u>வழக்கு எண்.SA.13797/F/2024</u>**
**<u>மனுதாரர்</u>**
திரு S. பாஸ்கர், த/பெ. சண்முகம்,
எண்.32, மாரி வீதி,
ஆட்டையாம்பட்டி (அஞ்சல்),
சேலம் - 637 501.

Copy to: File
SNPS / 11.04.2025